(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 195.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2012 யூன் 21, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1066/ '11

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அண்மைய சனத்தொகைக் கணிப்பீடு, புள்ளிவிபரங்கள் ஆகியவற்றை மையமாக் கொண்டு,

(i) நாட்டில் எத்தனை கிராமங்கள் உள்ளன என்பதையும்;

(ii) ஒரு கிராமத்தில் சராசரியாக எத்தனை குடும்பங்கள் வாழ்கின்றன என்பதையும்;

(iii) நாட்டில் எத்தனை கிராம சேவகர்கள் பிரிவுகள் மற்றும் கிராம சேவகர் பதவிகள் உள்ளன என்பதையும்;

(iv) நாட்டில் எத்தனை பிரதேச செயலாளர்கள் உள்ளனர் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு மாகாணத்திலும், மாவட்டத்திலும், தேர்தல் தொகுதியிலும், பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராம சேவகர் பிரிவுகளிலும் எத்தனை கிராமங்கள் உள்ளன என்பதை தனித்தனியாகவும்;

(ii) மாவட்ட அடிப்படையில் மொத்த சனத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அடுத்த உத்தியோகபூர்வ சனத்தொகை கணிப்பீடு எப்பொழுது நடைபெறும் என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1330/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருந்து வகைகளைக் கொள்வனவு செய்வதற்காக 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் இதுவரை கோரப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மருந்துகளை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்களை முன்வைத்த நிறுவனங்களின் பெயர்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நாடு முழுவதிலுமுள்ள அரச வைத்தியசாலைகளில் தற்போது அத்தியாவசிய மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றதா;

(ii) அரச வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை;

(iii) தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள மருந்து வகைகள் யாவை;

(iv) இந்நிலையைத் தவிர்த்து அரச வைத்தியசாலைகளுக்கு தட்டுப்பாடின்றி மருந்து வகைகளை வழங்க துரித நடவடிக்கை மேற்கொள்வாரா;

(v) அவ்வாறாயின் அதற்காகக் கடைப்பிடிக்கப்படும் வேலைத்திட்டம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1917/ '11

3\.

கௌரவ அஜித் பி. பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாடசாலைகளில் "இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000" கருத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) க/ வெவிட்ட மைத்திரி மகாவித்தியாலயம் "இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000" கருத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2041/ '11

4\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மோட்டார் வாகனப் பதிவுச் சான்றிதழை அச்சிடும் கேள்விப் பத்திரத்திற்காக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த நிறுவனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) கேள்விப்பத்திரத்திற்கு விண்ணப்பித்திருந்த ஒவ்வொரு நிறுவனமும் சமர்ப்பித்திருந்த விலைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) ஆகக்குறைந்த விலையைச் சமர்ப்பித்திருந்ந நிறுவனம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கேள்விப் பத்திரக் குழுவிலுள்ள உறுப்பினர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் வகிக்கும் பதவிகள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) குறித்த நிறுவனத்திற்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கேள்விப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

கௌரவ.பீ.ஹரிசன்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாகனப் புகை பரிசோதனைக் கருத்திட்டத்தின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி புகைப் பரிசோதனையின் நடைமுறை யாதென்பதையும்;

(iii) 2011 ஆம் ஆண்டில் புகை பரிசோதிக்கப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையினையும் இதற்காக ஒவ்வொரு வாகனத்திற்குமென அறவிடப்பட்ட கட்டணங்கள் ஒவ்வொரு வாகனத்தினதும் வகைக்கு அமைவாக தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) 2011 ஆம் ஆண்டில் புகை பரிசோதனையின் மூலம் ஈட்டிய முழுப் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வாகன புகை பரிசோதனைக் கருத்திட்டத்தில் தனியார் முகவர்களினதும், பொது நிறுவனங்களினதும் பணிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி பரிசோதனையை மேற்கொள்ளும் தனியார் முகவர்களின் தெரிவானது ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறைக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) முழுமொத்த வருமானத்தில் மேற்படி முகவர்களுக்கு பணம் செலுத்துவதற்கான முறையியல் யாதென்பதையும்;

(iv) மேற்படி முகவர்களின் முகாமைத்துவ பலவீனம் மற்றும் மோசடிகளை கண்டறிவதற்காக உரிய பின்னாய்வுப் பொறிமுறையொன்று அமுலாக்கப்பட்டுள்ளதா என்பதையும்

(v) ஆமெனின், இன்றளவில் அறிக்கையிடப்பட்டுள்ள சம்பவங்கள் மற்றும் அவை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள் எய்தப்பட்டுள்ளனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தரத்தில் குறைந்த பெற்றோல் பயன்படுத்தப்பட்டமையினால் சேதத்திற்கு உள்ளான வாகனங்கள் தொடர்பாகக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த கால எல்லை மற்றும் முறைப்பாடுகள் பொறுப்பேற்கப்படுதல் முடிவுறுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) தரத்தில் குறைந்த பெற்றோல் பயன்படுத்தப்பட்டமையினால் சேதத்திற்கு உள்ளான வாகனங்களுக்கு நட்டஈடு செலுத்துதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) தற்போது நட்டஈடு செலுத்தி முடிக்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) இதற்காக செலவான மொத்தத் தொகை யாதென்பதையும்;

(vi) மேற்கொண்டும் நட்டஈடு செலுத்துவதற்காக எஞ்சியுள்ள வாகனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(vii) இதற்காக செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தரத்தில் குறைந்த பெற்றோல் பயன்படுத்தப்பட்டமையினால் சேதத்திற்கு உள்ளான வாகனங்களுக்காக நட்டஈடு செலுத்துதல் மற்றும் தரத்தில் குறைந்த பெற்றோல் இறக்குமதி செய்தல் என்பன தொடர்பாக ஆராயும் பொருட்டு நியமிக்கப்பட்ட மூன்று நபர்களைக் கொண்ட குழுவீன் அங்கத்தவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் உரிய வேறு தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) இவர்களை நியமித்த அதிகாரி யாதென்பதையும்;

(iii) மேற்படி மூன்று நபர்களின் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில் அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1817/ '11

7.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தின் சியம்பலாண்டுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மொ/சி/கோன்கஸ்பிட்டிய கனிஷ்ட வித்தியாலயம் பிரதான வீதியிலிருந்து ஏறத்தாழ 12 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள கஷ்டப் பிரதேச பாடசாலை என்பதையும்;

(ii) கட்டட வசதிகள் கிடைக்காமையால் அப்பாடசாலையின் வகுப்பறைகள் தற்காலிகமாக அமைக்கப்பட்ட தகரக் கூடாரங்களிலேயே நடத்தப்பட்டு வருகின்றனவென்பதையும்;

(iii) மேற்படி நிலைமை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் உயிர்களுக்கு ஆபத்தானதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிலைமையின் கீழ் அப்பாடசாலையின் ஆசிரியர்கள் அல்லது மாணவர்களின் உயிர்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அதற்கான பொறுப்பினை வகிப்பவர் யார்;

(ii) நிலவுகின்ற பாதகமான நிலைமையைத் தவிர்த்து மொ/சி/கோன்கஸ்பிட்டிய கனிஷ்ட வித்தியாலயத்தில் நிலவுகின்ற கட்டடக் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில், அதற்கான நிதியேற்பாடுகள் ஒதுக்கப்படடுள்ளனவா;

(iv) ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(v) பாடசாலைக் கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்ற திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1925/ '11

8.

கௌரவ அஜித் பி. பெரேரா,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்கவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் சென்ற பெண்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் சென்ற பெண்களில் காணப்பட்ட தாய்மார்கள் தொடர்பான புள்ளி விபரங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வசமுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் சென்ற தாய்மார்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பிள்ளைகள் உள்ள பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் இவர்களின் குடும்ப அலகுகளிலுள்ள பிள்ளைகளுக்கு பாதகமான தாக்கங்கள் ஏற்படுமென்பதையும்;

(ii) அரசியலமைப்பின் 27(12) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரச கொள்கைகளை வழிப்படுத்துகின்றபோது குடும்ப அலகுகளை பாதுகாப்பதற்கு அரசுக்கு விசேட பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) ஆமெனில், பிள்ளைகள் உள்ள பெண்கள் பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்குச் செல்வதை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

(ஈ) இன்றேல், ஏன்?

2060/ '11

9.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பேணிவரப்படும் பதிவுசெய்யப்பட்ட பிரிவெனாக்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் தற்போது கல்வி பயின்றுவரும் மாணவ பிக்குமார்களின்/மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பிக்கு மாணவர்களுக்கு/மாணவர்களுக்கு மாதாந்தம் ஏதேனும் கொடுப்பனவு வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், ஒருவருக்கென செலுத்தப்படும் பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மஹிந்த சிந்தனை கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "இதுவரை பிரிவெனா மாணவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த ரூபா 1,000 நிதித் தொகையை ரூபா2,000 வரை அதிகரிக்கின்றேன்" எனும் வாக்குறுதி தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதனை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த திகதி யாதென்பதையும்;

(iii) அதன் கீழ் நலன்களைப் பெறுவோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) தற்போது மேற்படி வாக்குறுதி நடைமுறைப்படுத்தப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

கௌரவ பி. ஹரிசன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வடமத்திய மாகாண சபை சிறுநீரக நோயாளிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக தரக்குறைவான நீர் வடிகட்டும் சாதனங்களை முறைசாராத விதத்தில் கொள்வனவு செய்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நீர் வடிகட்டும் சாதனங்களின் கொள்வனவின்போது,

(i) செலவிடப்பட்ட பணத் தொகை மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட நீர் வடிகட்டும் சாதனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பின்பற்றப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை யாதென்பதையும்;

(iii) கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்த நிறுவனங்களின் பெயர், முகவரி மற்றும் சமர்ப்பித்த விலைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) கேள்விப் பத்திரம் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர், முகவரி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) நீர் வடிகட்டும் சாதனங்களின்,

(i) தரம் தொடர்பிலான பரிசோதனையை அரசாங்க நிறுவனமொன்றில் மேற்கொள்ளாது, கொள்வனவு செய்த நிறுவனத்திலேயே மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

(ii) பகிர்தளிப்பதை நிறுத்துமாறு கணக்காய்வாளர் நாயகம் உத்தரவிட்டிருக்கையில் தொடர்ந்தும் இவை கொள்வனவு செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) கொள்வனவிற்கான பணத்திற்கு அங்கீகாரம் வழங்கிய உத்தியோகத்தர் யாரென்பதையும்;

(iv) கொள்வனவானது அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக இடம்பெற்றுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) கொள்வனவு தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2252/ '12

11.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எம்பிலிப்பிட்டிய காகிதத் தொழிற்சாலை இறுதியாக மூடப்பட்ட திகதி என்னவென்பதையும்;

(ii) அப்போது அந்த அலுவலகத்தில் பணிபுரிந்த நிரந்தர மற்றும் அமைய ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மூடப்பட்ட அந்தத் தொழிற்சாலையின் ஊழியர்களுக்கு இன்னமுமே சம்பளம் செலுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iv) அதற்காக மாதாந்தம் செலவிடப்படும் மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) ஊழியர்களின் சம்பளங்களை செலுத்துவதற்காக மூடப்பட்ட திகதி தொடக்கம் 2011 செப்டம்பர் மாதம் வரை பொதுத் திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) ஊழியர்களுக்காக செலுத்த வேண்டியுள்ள நிலுவை ஊழியர் நட்டஈடு, சேமலாப நிதி, ஊழியர் பணிக்கொடை ஆகியவற்றின் மொத்தப் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(vii) அந்தப் பணத்தை செலுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(viii) அவ்வாறெனின், அதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை மின்சார சபைக்கு எம்பிலிப்பிட்டிய காகிதத் தொழிற்சாலையினால் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்தக் கடன் தொகையை தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கை யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1818/ '11

12.

கௌரவ புத்திக்க பத்திரண,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தின் பிபில மெதகமபிரதேச செயலகப் பிரிவுக்குரிய கொட்டபோவ வீதியின் முதலாம் மைற்கல் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான பாரிய அளவிலான நெற்களஞ்சியமொன்று சுமார் இருபது வருட காலமாக எவ்விதமான பாவனைக்கும் எடுக்கப்படாமல் மூடப்படடுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி களஞ்சியத்தை புனரமைத்து மீண்டும் நெல்லைக் களஞ்சியப்படுத்தும் பொருட்டு பயன்படுத்த இயலுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில் , இதன் பொருட்டு நிதியேற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா;

(ii) இன்றேல், வேறு ஏதெனுமொரு கைத்தொழிலை இங்கு ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பாரா;

(iii) ஆமெனில் , அத்திகதி யாது

என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2061/ '11

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது ஓய்வூதியம் பெறும் இளைப்பாறிய அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவர்களுக்காக அரசினால் செயற்படுத்தப்படுகின்ற நலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய காப்புறுதித் திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள 'ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு சுகாதார வசதிகளுக்காக மருந்துகள் மற்றும் மருத்துவ கட்டணங்களுக்கு வருடத்துக்கு ரூபா 10000/- பெறுமதியான சுகாதார காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவேன்' என்ற வாக்குறுதிக்கமைய அறிமுகப்படுத்தப்பட்டுள்ள காப்புறுதித் திட்டம் யாதென்பதையும்;

(ii) இதன் கீழ் நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடைய ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது நலன்களைப் பெற்றுக்கொண்டுள்ள ஓய்வுபெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது நலன்களாக செலுத்தப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) இன்றேல், மேற்படி காப்புறுதித் திட்டத்தின் கீழ் நலன்களை பெற்றுக்கொடுத்தல் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல்,ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 4.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 5.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட துமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 8.

கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

9.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

10.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

11.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

12.

கலாநிதி மாலினி பொன்சேகா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

பிய தசுன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.